பக்கங்கள் ஆறு; Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6=00

அன்பளிப்பு

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி 5 சனிக்கிழமை (17-02-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 85

# புலிகளின் கப்பலின் நகர்வு; இந்தியாவே துப்புத் தந்தது!

## ஸ்ரீலங்கா இராணுவம் தகவல்

கொழும்பு, பெப்ரவரி 17

முல்லைத்தீவு கடற்பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் கப்பல் மீது கடந்த புதன்கிழமை அதிகாலை தாக்குதல் நடத்துவதற்கு வசதியாக விடுதலைப் புலிகளின் கப்பல் பற்றிய நகர்வை இந்தியாவே ஸ்ரீலங்காவுக்குத் தந்துதவியது.

—இவ்வாறு கொழும்பில் ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

எனினும் —

விடுதலைப் புலிகளின் கப்பல் மீதான தாக்குதலில் ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பல்களுடன் இந்தியக் கடற்படைக் கப்பல்களும் ஈடுபட்டன என்று கூறப்படுவது குறித்து கேட்சப்பட்ட போது —

அது பற்றி தம்மால் கருத்து எதையும் கூறமுடியாது என்று ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் சார்பில் பேச வல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்றும் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

கடந்த பல வருடங்களாக இந்திய — ஸ்ரீலங்கா கடற்படைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கூட்டாகச் செயற்பட்டு வருகின்றன என்று இந்த நடவடிக்கை மூலம் ஊர்ஜிதமாகியிருக்கின்றது என சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார். (உ-3-6-7)

## குண்டு கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு நகருக்குள் உள்ள வீதியோர பொதுத் தொலைபேசி நிலையம் அருகே கடந்த ஞாயிறன்று குண்டொன்று கண்டு பிடிக்கப்பட்டதாக ஸ்ரீலங்காப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தப் பொதுத் தொலைபேசி நிலையம் அதிகளவில் இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மலையகத்தில் புலிகள் பெருமளவு ஊடுருவல்

கொழும்பு, பெப். 17

மலையக இளைஞர்களை தமது இயக்கத்தில சேர்த்துக் கொள்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மலையகத்தில் ஊடுருவி இருப்பதாக பொலீஸாருக்குத் தகவல் கிடைத்திருக்கின்றதாம்.

கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று இத்தகவலை நேற்று வெளியிட்டது.

விரைவில் மலையகத்தில் பாரிய தேடுதல் வேட்டை ஒன்றை நடத்த பாதுகாப்புப் படையினர் தயாராகி வருவதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## மூதூரில் ஹர்த்தால்

சாவகச்சேரி, பெப். 17

குமாரபுரம் படுகொலையைக் கண்டித்தும், கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்து முகமாகவும் நேற்று முன்தினம் திருமலை மாவட்டம் மூதூரில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (இ-7)

## தாண்டிக்குளத்தில் தடை நீடிக்கிறது!

சாவகச்சேரி, பெப். 17

தாண்டிக்குளம் தடை முகாமில் நேற்று முன்தினம் நான்காவது நாளாக தெற்கே செல்ல லொறிகள் அனுமதிக்கப்படவில்லை. அதே போன்று சாதாரண பயணிகள் மட்டும் அல்ல, அரச அதிகாரிகளும் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் படையினரால் அமுல் செய்யப்பட்டு வரும் இந்த உத்தியோகப்பற்றற்ற தடையினால் வடபகுதியில் இருந்து தென் பகுதி நோக்கிச் சென்ற நூற்றுக் கணக்கான பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி உள்ளனர்.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு பகுதிகளின் அரச அதிபர்களின் ஏற்பாட்டில் அத்தியாவசியப் பொருள்களை ஏற்று வதற்காகச் சென்ற லொறிகளும் திருப்பி விடப்பட்டுள்ளன. (இ)

## புலிகளின் கப்பல் மீதான தாக்குதலில் ஈடுபடவில்லை என்கிறது இந்தியா

கொழும்பு, பெப்.17

கடந்த புதன்கிழமை முல்லைத்தீவுக் கடற்பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பல்களுடன் இந்தியக் கடற்படைக் கப்பல்களும் சம்பந்தப்பட்டிருந்தன என்று கூறப்படுவதை இந்தியாவும் இந்தியக் கடற்படையும் பறுத்துள்ளன.

இந்தச் சம்பவத்தில் தமது நாட்டுக்கு பங்கு ஏதும் கிடையாது என இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் சார்பில் பேசிய அதிகாரி ஒருவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

புலிகளின் கப்பலின் நகர்வு பற்றிய துப்பை இந்தியாவே ஸ்ரீலங்காவுக்குக் கொடுத்தது என்பது குறித்து இலங்கையில் முன்னர் இயங்கிய இந்திய அமைதிப்படையின் தளபதியாக இருந்தவரும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியுமான லெப்டினன்ட் ஜெனரல் அமர் ஜித்சிங் கல்கத் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

''இரண்டு நாடுகளும் 'சார்க்' அமைப்பின் உறுப்பினர்கள். எனவேஇரண்டுக்கும் இடையில் பரஸ்பர ஒத்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மின் மாற்றி தகர்ப்பு

### நகரில் மீண்டும் சம்பவம்

சாவகச்சேரி, பெப். 17

மட்டக்களப்பு நகரில் மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க மண்டபத்துக்கு அருகே உள்ள மின்மாற்றி மீண்டும் குண்டு வீசித்தகர்க்கப்பட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்கு முன்பும் குண்டு வீச்சினால் இது தகர்க்கப்பட்டு புதிய மின் மாற்றி பொருத்தப்பட்டிருந்தது. தற்போது அதுவும் தகர்க்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் கடந்த வருடம் எட்டரைக்கோடி ரூபா பெறுமதியான 49 மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டுள்ளன என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. (இ-7)

## புலிகளின் ஆயுதங்கள் கப்பல்களில் வருகின்றன!

### ஸ்ரீலங்கா அரசு கூறுகின்றது

கொழும்பு, பெப். 17

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துப் பொருள்களை ஏற்றிக் கொண்டு நான்கு கப்பல்கள் நான்கு வெளிநாடுகளில் இருந்து இலங்கையை நோக்கிப் புறப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ''லங்காதீப'' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இதேசமயம் — வடக்கு கடலில் விடுதலைப் புலிகளின் மற்றொரு ஆயுதக் கப்பல் நடமாடுவது குறித்து படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாக ஸ்ரீலங்கா அரசு தெரிவித்தது என்று இலங்கை வானொலி அறிவித்தது.

அக்கப்பலை கடற்படை, விமானப்படை ஆகியன கண்காணிப்பதாகவும—

விசாரணை இடம்பெறுவதாகவும்—

ஸ்ரீலங்கா அரசு மேலும் தெரிவித்துள்ளது. (உ-3)

## தலைநகருக்குள் புலிகள்

### ராணுவத்தினரது போன்ற வாகனத்தில் ஊடுருவலாம்!

இராணுவ வாகனத்தை ஒத்த வாகனம் ஒன்றில் தமிழீழ விடுதலைப்புலிகள் தலைநகர் கொழும்புக்குள் ஊடுருவியிருப்பதாகக் கொழும்பில் வெளியான தகவலை அடுத்து அங்கு பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இத்தகவலை அடுத்து—

தலைநகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று லங்காதீப தெரிவித்தது. (உ-6)

## தற்கொலைக் குண்டுதாரியின்

### துண்டிக்கப்பட்ட தலை மீண்டும் பிரிட்டனுக்கு

கொழும்பு, பெப். 17

காமினி திஸநாயக்காவைக் கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்படும் பெண் தற்கொலையாளியின் துண்டிக்கப்பட்ட தலை வைத்திய பரிசோதனைக்காக மீண்டும் பிரிட்டனுக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளது.

1994 செப்டெம்பர் 24 ஆம் திகதி கொழும்பு பாலத்துறையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் காமினி திஸநாயக்கா கொல்லப்பட்டது தெரிந்ததே.

குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பெண் தற்கொலையாளியின் துண்டிக்கப்பட்ட தலை முன்னரும் பிரிட்டனுக்கு ஆய்வுக்காக அனுப்பட்டது.

தற்போது சட்ட வைத்திய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## லங்கா முடிதவில் தபால் பொதிகள்

வடமராட்சி, பெப். 17

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த லங்காமுடித கப்பலில் 246 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டன.

எதிர்வரும் திங்கள் முதல் அவை பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது!

## தமிழ்த்தாய் நாட்காட்டி - 1996

★ தேசியத் தலைவரின் படத்தை தாங்கிய பலவர்ண அட்டைகளுடன் வெளிவந்துள்ளது.

✶ போராட்ட வரலாற்றையும் பொது அறிவு விடயங்களையும் தாங்கியவாறு சோதிடக் குறிப்புக்களுடன் இது அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்து பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**விலை ரூபா: 175**

(40776)


## தவறிவிட்டது

சு. முருகதாஸ் என்பவருடைய **751510691V** இலக்க அடையாள அட்டை, குடும்ப அட்டை அடங்கிய டயறி மீசாலை மடத்தடிக்கு சமீபமாக கண்டி வீதியில் 14-02-96 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி விக்னேஸ்வராக் களஞ்சியத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(40777)

## வட இலங்கைச் சங்கீத சபை
## பரீட்சைகள் - 1996

வட இலங்கைச் சங்கீத சபையால் நடத்தப்படவுள்ள 1996 ஆம் ஆண்டுப் பரீட்சைகள் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

இப்பரீட்சை ஒழுங்குகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

இ. சிவானந்தன்
யாழ்ப்பாணம் வலயம் - I
கல்விப் பணிப்பாளரும், வட இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

வ.இ.ச.ச. யாழ்ப்பாணம்,
மகளிர் கல்லூரி,
சாவகச்சேரி.
15-02-1996.

(சி/4048)

## நகரசபை, சாவகச்சேரி

1996 ஆம் ஆண்டில்
இரண்டு உழவு இயந்திர/ ஒரு இரு சக்கர உழவு இயந்திரம் வண்டிகளின் சேவைகளைப் பெறுவதற்கான

## கேள்வி அறிவித்தல்

01-03-96 தொடக்கம் 31-12-96 வரையிலான காலப் பகுதிக்கு நகரசபை எல்லைக்குள் கீழ் குறிப்பிடப்படும் சேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 28-02-96ஆம் திகதிக்கு முன்பு 10-00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 10-15மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

| சேவைகள் | கேள்வி வைப்புக் கட்டணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|
| குப்பை கூளங்களை அகற்றுவதற்கு உழவு இயந்திரம் பெட்டியுடன்/இரு சக்கர உழவு இயந்திரம் (லாண்ட் மாஸ்ரர்) பெட்டியுடன் வாடகைக்கு வழங்க | ரூ 1000/- | ரூ 500/- |

மேற்படி வைப்புப் பணம் கேள்விப் படிவக் கட்டணங்கள் செலுத்தப்படுவதன் பேரில் 26-02-96ஆம் திகதி 12-30 மணிவரை வழங்கப்படும். படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா.

சித்திகரக் கேள்விக்காரர்கள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும்.

குறித்த கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

இது சம்பந்தமான ஏனைய விவரங்கள் இவ்வலுவலகத்தின் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. நடராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
13-02-96.

**குறிப்பு:** ஒவ்வொரு இயந்திரத்திற்கும் தனியாகப் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

(சி-2973)

## அடையாள அட்டைகள்

யாழ். பிரதேச செயலகப் பிரிவில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கு உரிய அடையாள அட்டைகள் வந்துள்ளன. உரியவர்கள் தகுந்த ஆவணங்களுடன் சென்று அவற்றை யாழ். மாவட்டச் செயலக தகவல் மையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## குடும்பத்துக்கு 3 லீற்றர் ம.எண்ணெய்

''மாஹோ'' கப்பலில் எடுத்துவரப்பட்ட மண்எண்ணெய் ஒரு குடும்பத்துக்கு 3 லீற்றர் என்ற அடிப்படையில் லீற்றர் 25 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவிருக்கிறது.

ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாக இந்த மண்எண்ணெய் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-3-7)

## சிவராத்திரி நிகழ்வுகள்

இந்து ஆலயங்களில், குறிப்பாக சிவன் கோவில்களில் இன்று மகா சிவராத்திரியை முன்னிட்டு விசேட பூசைகளும், அபிஷேகங்களும் நடைபெறும்.

மாலை தொடக்கம் நான்கு சாமப் பூசைகள், அபிஷேகங்கள் மிகச் சிறப்பாக நடைபெறும்.

தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் உள்ள அனேகமான ஆலயங்களில் சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு கூட்டுப்பிரார்த்தனை, சமயச் சொற்பொழிவுகள் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

★ ★ ★

கிளிநொச்சியில் உருத்திரபுரீச்சரம் சிவாலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு நான்கு சாமப் பூசைகளும், கூட்டுப் பிரார்த்தனைகளும், சமயச் சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களின் நலன் கருதி விசேட போக்குவரத்துச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

★ ★ ★

வடமராட்சி ஸ்ரீசத்தியசாயி நிலையங்கள் சிவராத்திரி விழாவை வியாபாரிமூலையில் உள்ள ஸ்ரீசத்யசாயி நிலையத்தில் பல சிறப்பு நிகழ்ச்சிகளுடன் அனுஷ்டிக்கிறது.

சிவலிங்க அபிஷேகம், பூசைகள், சமயச் சொற்பொழிவுகள், பண்ணிசைகள், பஜனை, நாமஜெபம் என்பன நிகழ்ச்சிகளில் அடங்கும். (அ)

## நியமன ஆராதனை

வடக்கு-கிழக்கு மாகாண மறை மாவட்டத் தலைவர் அருட் திரு எஸ்.எஸ் கருணைராஜ் அவர்களின் நியமன ஆராதனை கடந்த திங்கட்கிழமை மாலை இலங்கை மெதடிஸ்ததிருச்சபைத் தலைவர் அதி வணக்கத்துக்குரிய டுலீப். ஆர். பெர்னாண்டோ அவர்களினால் நடத்தி வைக்கப்பட்டது.

பருத்தித்துறை மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெற்ற இந்த ஆராதனையின் பின்னர் சிறப்புக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் திரு.ரி.ஞானசீலன் தலைமையில் நடைபெற்றன.

அதி வணக்கத்துக்குரிய டுலீப் ஆர். பெர்னாண்டோ, தென்னிந்திய திருச்சபை யாழ். அத்தியட்சாதீன பேராயர் அதி வண. எஸ். ஜெபநேசன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) திரு டி.ஆர். அருமைநாயகம், மற்றும் மெதடிஸ்த திருச்சபை மத குருமார் சிறப்புக் கூட்டத்தில்உரைநிகழ்த்தினர். அருட்திரு எஸ். எஸ். கருணைராஜ் நன்றி தெரிவித்து உரை நிகழ்த்தினார்.

## புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வ - து)
புலோலி கிழக்கு, பருத்தித்துறை

## பதவி வெற்றிடம்

**பொது முகாமையாளர் 101/9:-**

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்திற்குள் வசிக்கும் தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தை சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. **தகைமைகள்**

அ) கூட்டுறவுப் பணியாளர் 10வது சம்பளத் திட்டத்தில் முகாமை மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11வது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்தவண்ணம் 6 வருட அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர் தரம்)/க. பொ. த. (உயர் தரம்)இல் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

2. **வயதெல்லை**
25 — 45 வரை (கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்வோருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.)

3. **சம்பளத்திட்டம்**
101 / 9 - 1405 - 2470
60 X 4, 75 X 11
அத்துடன் கூட்டுறவு ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கமைய சகல படிகளும் வழங்கப்படும்.

4. சங்க தொழிற் பரப்பிற்குள் வசிக்கும் ப.நோ.கூ. சங்கத்தில் அனுபவம் மிக்க விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 06-03-96 அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக தலைவர், புலோலி ப. நோ. கூ. சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்
புலோலி ப.நோ.கூ.சங்கம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(சி-4049)

## மரண அறிவித்தல்

திருமதி
### அம்பிகாதேவி ஜெகநாதன்
(கமலா)

தெல்லிப்பழை, மகாதனையை பிறப்பிடமாகவும், 17, கைலாசபிள்ளையார் கோவில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பிகாதேவி (கமலா) ஜெகநாதன் 10 - 02 - 1996 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் அம்பலவாணர் ஜெகநாதன் [இளைப்பாறிய உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ். 2 ஆம் கிளை] அவர்களின் அன்பு மனைவியும், வாசுகி, சுதர்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயசங்கரின் [உதவி விரிவுரையாளர், கிழக்குப்பல்கலைக்கழகம்] அன்பு மாமியாரும், மகாதனை தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்பர்சுவாமி —சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற அம்பலவாணர் (முன்னாள் உடுவில் கிராம சபைத் தலைவர்) — இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், திருமதி இராஜலட்சுமி பாலசுப்பிரமணியம் [ஆஸ்திரேலியா], திரு அண்ணாமலை, திரு. இராமநாதன் [கனடா] திருமதி கனகாம்பிகை சேதுராசா, திரு கோபாலகிருஷ்ணன் [முகாமையாளர், (மக்கள் வங்கி யாழ். கன்னாதிட்டி [சாவகச்சேரி]] ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி மகேஸ்வரி இரத்தினசபாபதி (கனடா), திருமதி புவனேஸ்வரி ஆறுமுகம் [ஆஸ்திரேலியா], திருமதி நாகேஸ்வரி இராமநாதன், திரு இராமநாதன் [இங்கிலாந்து], திரு. யோகநாதன், திருமதி இரட்னேஸ்வரி பாலசிங்கம் [நூலகர், பொது நூலகம், சுன்னாகம்] ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15 - 02 - 96 இல் அன்னாருடைய தற்போதைய இல்லத்தில் நடைபெற்றன.

தகவல்:
அ. ஜெகநாதன் (கணவர்)
அ. கோபாலகிருஷ்ணன் (தம்பி)
பா. இரட்னேஸ்வரி (மைத்துனி)
ஆ. மனோகரன் (மருமகன்)

தற்போதைய முகவரி:-
மே/பா C. T. B. செல்லையா,
வரணி வீதி, (வேம்பிராய் சந்தி),
மந்துவில் கிழக்கு, மந்துவில்.

(40734)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளருடன் சென்ற அம்புலன்ஸ் தாண்டிக்குளத்தில் திருப்பிவிடப்பட்டது

கிளிநொச்சி, பெப். 17

கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து நேற்று முன்தினம் நோயாளர்களுடன் சென்ற அம்புலன்ஸ் வாகனம் ஒன்று தாண்டிக்குளத்தில் வைத்து படையினரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இந்த அம்புலன்ஸில் பயணம் செய்த ஏழு நோயாளர்களும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் மீண்டும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சிவகுரு தெரிவித்தார்.

மேலதிக சிகிச்சைக்காகவே நோயாளர்கள் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இருந்து கொழும்புக்கு அனுப்பப்பட்டு வந்தனர்.

தற்போது தாண்டிக்குளம் தடை முகாமில் படையினர் ஏற்படுத்தியுள்ள பிரயாணத் தடையால் மேலதிக சிகிச்சை பெறவேண்டிய நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாத நிலையில் இருந்து வருவதாகவும் —

இது ஓர் ஆபத்தான நிலைமை என்றும் வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் தாண்டிக்குளம் தடைமுகாமில் படையினர் பிரயாணத் தடையை ஏற்படுத்துவது தெரிந்ததே.

வடக்கில் இருந்து செல்லும் பயணிகளுக்கு மட்டும் அன்றி லொறிகளுக்கும் படையினர் தடை விதித்து வருகின்றனர்.

அதே போன்று வவுனியாவில் இருந்து வடக்கே வரும் பயணிகள் சம்பந்தமாகவும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

(இ)

## சுண்டிக்குளப் பகுதிக்கு நடமாடும் வைத்தியசேவை

கிளிநொச்சி, பெப். 17

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையின் நடமாடும் வைத்திய சேவை சுண்டிக்குளம் பகுதிக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

சுகாதார வசதிகள் அற்ற நிலையில் உள்ள சுண்டிக்குளம், பூனைத்தொடுவாய் பகுதி மக்களின் நலனுக்காக இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் —

விரைவில் அப்பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கவிருப்பதாகவும் — கண்டாவளை செஞ்சிலுவைச் சங்க கிளை நிர்வாக அதிகாரி திரு. எஸ். எஸ். சின்னத்தம்பி தெரிவித்தார்.

(இ-3)

## தென்மராட்சிப் பகுதியில் கிணறுகளுக்கு குளோரின்

### யாழ். மாநகர சபை இடுகிறது

தென்மராட்சி பெப். 17

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள கிணறுகளுக்கும் மற்றும் பொதுப்பாவனையில் உள்ள கிணறுகளுக்கும் யாழ். மாநகரசபை இரண்டு தினங்களுக்கு ஒரு முறை குளோரின் இட்டு வருகின்றது. மொத்தம் 508 கிணறுகளுக்கு இவ்வாறு குளோரின் இடப்படுகிறது.

அதிக அளவு மக்களின் பாவனையில் உள்ள கிணறுகளுக்கும் குளோரின் இட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இப்படியானவர்கள் குளோரின் இட விரும்பினால் சாவகச்சேரி நகரசபை கட்டடத்தில் இயங்கும் யாழ். மாநகர சபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாநகர சபை ஆணையாளரும், குடிதண்ணீர் சுற்றுப்புற சூழல் இணைப்பாளருமாகிய வே. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொதுப் பாவனையில் உள்ள கிணறுகளை இறைத்து துப்புரவு செய்ய விரும்புவோரும் மாநகர சபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் தென்மராட்சிப் பகுதியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் உதவியுடன் 119 கிணறுகள் மாநகர சபையினால் இறைத்து துப்புரவு செய்யப்பட்டன என தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## கட்டாய இராணுவ சேவை

சாவகச்சேரி, பெப். 17

யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கு கட்டாய இராணுவ சேவை குறித்து ஸ்ரீலங்கா அரச உயர்மட்டங்கள் தீவிரமாக ஆலோசித்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களில் 11 ஆயிரத்து 500 பேரை இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்ட அரசு அதில் அரைவாசிப் பேரைக் கூட சேர்க்க முடியாது போனது.

இதனால் கவலைக்குள்ளாகியுள்ள பாதுகாப்பு அமைச்சு, யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதானால் 18 வயது முதல் 35 வயது வரையுள்ள மக்களுக்கு யுத்தப் பணியை கட்டாயமாக்க அரசாங்கத்தை தொடர்ந்து வற்புறுத்தி வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## சிவராத்திரிச் சிந்தனை

மனிதனாகப் பிறந்தவர்கள் தமது உடல் நிலையற்றது; இந்த மாயை நிறைந்த உலகமும் அதில் உலவும் பொருள்களும் நிலையற்றவை; ஆசைகள் பாசங்கள் நிலையற்றவை; என்ற உண்மையை உணர்ந்து கொள்ளவேண்டும்.

இதனை உணர்ந்து கொண்டால் உலகில் பொருள்களின் மீதான ஆசையும், அதனால் ஏற்படும் போட்டியும் யுத்தமும் அதன் பயன்பாடாகிய அழிவும் நிகழமாட்டா.

இன்று உலக நாடுகள் பலவற்றில் நாம் காணும் நிகழ்ச்சிகளுக்கு மும் மலங்களின் ஆதிக்கமே காரணமாகும். ஆனால் இவை நிலையற்றவை என்பதனையும் சிவமே நிலையானது என்பதனையும் எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

உலகில் நாம் காணுகின்ற சடப் பொருள்கள் எதற்கும் ஆதியும் அந்தமும் உண்டு. ஆகவே அவை நிலையற்றவை. ஆதியும் அந்தமும் இல்லாதது சிவம் ஒன்று மட்டுமே. அதுவே நிலையானது. சிவராத்திரி இதனையே உணர்த்துகிறது.

இதனை 'ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெரும் சோதி' எனத் திருவாசகமும் (திருவெம்பாவை) 'அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்' எனக் கந்தபுராணமும் இயம்புகின்றன.

இன்று போரின் இடர்களினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வந்து பல இடங்களிலும் வாழும் மக்களின் குரல்களில் ''எமது சொத்துக்களை எல்லாம் இழந்து விட்டோம்'' என்ற வார்த்தை அடிக்கடி ஒலிக்கிறது.

வர்கள் மாயையின் வலையில் இருந்து மீளவில்லை என்பதனையே உணர்த்துகிறது. மனிதனின் உண்மையான சொத்து 'சிவம்' என்னும் இறைவனே. அந்தச் சிவம் மனிதனின் இதயத்திலே தான் குடியிருக்கிறான். இடம்பெயர்ந்து வந்தபோது அந்தச் சொத்தையும் தன்னுடைய இதயத்திலே இருத்திக்கொண்டு வந்துவிட்டான். ஆகையால் இடம்பெயர்ந்தவர்கள் உண்மையான சொத்தை இழக்கவில்லை!

பந்தங்களையும் உலகில் உள்ள அசையும் தன்மை கொண்ட சொத்துக்கள் மீதுள்ள பற்றுதல்களையும் 'நான்' என்ற அகங்காரத்தையும் அதன் மூலம் ஏற்படும் போட்டி பொறாமைகளையும் அகற்றுவதற்கு நாம் முயற்சி செய்யவேண்டும்.

விதி என வர்ணிக்கப்படும் கன்ம வினையிலிருந்தும் விடுபட முயற்சிக்க வேண்டும். இதற்கு ஏற்ற வழி சிவராத்திரி விரதமிருந்து சிவ நாமத்தை உச்சரிப்பதாகும்.

கு. சி. சுந்தரம்பிள்ளை.

## சந்திரிகாவின் வெளிநாட்டு பயணச் செலவு

கொழும்பு, பெப். 17

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களின்போது செலவிட்ட நிதியின் கணக்கை கோருகிறார் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்ன.

நாடாளுமன்றம் அடுத்த முறை கூடும்போது களுத்துறை மாவட்ட ஐ. தே. க. உறுப்பினரான திலக் கருணாரத்னா இது தொடர்பான கேள்வியை எழுப்பவிருக்கிறார்.

(இ-3)

## கஷ்ட நிவாரணப்படி கோரிக்கை

சாவகச்சேரி, பெப். 17

கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியா மாவட்டத்தில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் கஷ்ட நிவாரணப்படி யாழ். மாவட்ட ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட தபாலக உத்தியோகத்தர் சங்கம் கேட்டுள்ளது.

யாழ். அரச அதிபரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ள அச் சங்கம் உயர் மட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இந்த நிவாரணம் யாழ் மாவட்ட ஊழியர்களுக்கும் கிடைக்க உதவுமாறு கேட்டுள்ளது.

(இ-3)

## நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 18 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ சரஸ்வதி தம்பிப்பிள்ளை — 15/6, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை.
★ கொன்சிபிலோமினா அல்பிரட்ஜேம்ஸ் — சென். ஜேம்ஸ் ஒழுங்கை, இளவாலை.
★ லக்ஷ்மி கனகசபை — இல. 2, 5ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை.
★ சரஸ்வதி இராஜேஸ்வரி — ''பெனடிற்'' இல. 50, புது வீதி, கொய்யாத்தோட்டம், சுண்டிக்குளி.
★ கந்தையா இராசதுரை — மே/பா கண்ணன் ஸ்ரோர்ஸ், புத்தூர்.
★ த. சிவபாதசுந்தரம் — வளாக வீதி, திருநெல்வேலி தெற்கு.
★ முருகேசு கனகலிங்கம் — 281/7, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
★ வினாசித்தம்பி கணபதிப்பிள்ளை (சின்னையா) — காமிக்கலட்டி, இடைக்காடு, அச்சுவேலி.
★ மாரிமுத்து நடராஜா — செந்தூரகம், கராச்சடி, சண்டிலிப்பாய்.
★ வேலாயுதம் மயில்வாகனம் அல்லது மயில்வாகனம் கெங்காதரன் — அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கு.
★ செல்லம்மா பழனிச்சாமி அல்லது சாரதா சுப்பையா — 591, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடி.
★ வேலாயுதம் ஆறுமுகம்—சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.
★ பரமேஸ்வரி குமாரசாமி — 7ஆம் கட்டை, சண்டிலிப்பாய்.
★ பூரணம் செய்வேத்தி அல்லது இராக்கினி செய்வேத்தி — சில்லாலை தெற்கு.
★ சாந்தினி இரத்தினம் — தாவடி வடக்கு, கொக்குவில்.
★ வேலாயுதபிள்ளை சத்தியசீலன் — 51/7, மூத்த விநாயகர் வீதி, 1ஆம் ஒழுங்கை, நல்லூர்.
★ கௌரி சண்முகநாதன் — யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
★ ராஜகோபால் நந்தகுமாரன் (உயர் போதனாசிரியர்) — யாழ்ப்பாண வளாகம், யாழ்ப்பாணம்.
★ செல்வராணி வீரசிங்கம் — ஐயனார் கோவிலடி, சுன்னாகம்.
★ அப்பையா தம்பையா — 73, இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டு.
★ செல்லையா தம்பிராசா — இலகடி, கோப்பாய் வடக்கு.
★ இராஜலட்சுமி துரைராஜ் (துரை அன் கோ) — இல. 36, 2ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை கிழக்கு.
★ ஆறுமுகம் சிவலோகநாதன் — இல. 14, 2ஆம் குறுக்குத் தெரு. கொழும்புத்துறை கிழக்கு.
★ கிளாக்கர் தில்லைவனம் தனபாலசிங்கம் — 126, மெயின் வீதி, கொழும்புத்துறை கிழக்கு.
★ பிள்ளையார் சிவலிங்கம் — ஏழாலை வடக்கு, ஏழாலை.
★ நடேசு இராசலிங்கம் — மட்டிகுடியிருப்பு, நெடுங்கேணி.
★ யே. வின்ரன் றகிலா — E 15, ORSC, பாலம்பிட்டி, மன்னார்.
★ திருமதி பரமேஸ்வரி சின்னத்துரை அல்லது க. சின்னத்துரை — ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, பூநகரி.
★ சுவாமிப்பிள்ளை கினமெனீட் — இல D 30, R. S. C, தட்சனா மருதமடு, பாலம்பிட்டி.
★ திருமதி ரஞ்சினி இரத்தினவேல் — 107 ஆம் மைல் கல், புளியங்குளம்.
★ பேனான்டோ J. சதானந்தன் (பொறியியலாளர்) புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
★ நாகராசா கலாநிதி — மே/பா. சிவபாதம், அக்கராயன்குளம், கிளிநொச்சி.
★ ஞானம் மாகந்தசாமி — திருவையாறு, நான்காம் பகுதி, ½ ஏக்கர் திட்டம், சாந்தபுரம், கிளிநொச்சி.
★ சபாவதி தியாகராசா பிறேமராஜன் — முள்ளியவளை, முல்லைத்தீவு.
★ திருமதி சோதிப்பிள்ளை தம்பிராசா — மே/பா. ஆறுமுகம், Tele wrner, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
★ நா. சிவப்பிரகாசம் — மே/பா சி. தாமோதரம்பிள்ளை, ரெத்தினபுரம், கிளிநொச்சி.
★ நாகப்பன் வடிவேல் — 192, ஜெயந்திநகர், கிளிநொச்சி.
★ தம்பு சிவபாதசுந்தரம் — 30 வீட்டுத் திட்டம், இல. 10 கண்டிறோட், புளியங்குளம்.
★ துஷ்யந்தினிமுருகையா—75/01, முரசுமோட்டை, பரந்தன்.
★ சிவகுரு சிவரட்ணம் — கிழக்குவளவு, மல்லாகம்.
★ வீரசிங்கம் தயாசீலன் — பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு.
★ சின்னத்துரை நடேசபிள்ளை — தாவடி தெற்கு, கொக்குவில்.
★ சிவகுரு நாகராசா — அச்சுவேலி தெற்கு
★ கதிரவேலு கந்தசாமி — 7 ம் கட்டை, சேச் வீதி, மல்லாகம்.
★ லோறளிசியா குசைப்பிள்ளை — மே/பா ம. ஆரோக்கியநாதர், கொல்லர் புளியங்குளம், மாங்குளம்.
★ செல்லையா தனபாலசிங்கம்—இல. 576, இராமநாதபுரம், கிளிநொச்சி.
★ தவமணி நாகேஸ்வரன்— மே/பா K. விஸ்வரெட்ணம், பிள்ளையார் ஸ்ரோர்ஸ், கனகபுரம், கிளிநொச்சு.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஏசியா லேடீஸ் சைக்கிள், Sony ஸ்ரீரியோ டபிள் கசற் ரெக்கோடர் அன்ட் றேடியோ, Yuasa கார் பற்றறி. தொடர்பு: சுபாஷிப் பிள்ளை வீடு, கண்டி வீதி, (ஹனிமூன் மதுச்சோலைக்கு அருகாமை) சாவகச்சேரி. [40666]

கட்டடப் பொருள்கள் விற்பனைக்குண்டு. வேப்பம் பலகை 500 சதுரடி அளவு, காவி 125 கிலோ, வச்சிரம் 12 கிலோ, கொங்கிறீற் 3/8'' 13 கியூப், இரும்பு முறுக்கு 1½'' 14, 3/8'' 13 பார், கொன்றாக்ரர், தொடர்பு: பாக்கிய பவனம், கல்லூரி வீதி, பருத்தித்துறை. (40140)

Commodore-64 Computer (சகல பாகங்களுடனும்), இலத்திரனியல் தட்டச்சு இயந்திரம், Grundig டிஜிட்டல் ரேடியோ மேலும் பல. தொடர்புகளுக்கு இல. 16, சேச் லேன், சாவகச்சேரி. [கிழமை நாள்கள் மாலையில்]. [40665]

## SPOKEN ENGLISH

கற்றல், கற்பித்தல் அனுபவமுடைய B.Sc (Cey) London Inter Science ஆசிரியரினால் ஆண்டு 6 தொடக்கம் O/L வரை Distinction, Credit பெறுபேறுடைய Spoken English (மீட்டல் முறையிலும்) கற்பிக்கப்படும். மே/பா, சரவணமுத்து கமலாச்சி, வேதவனப்பிள்ளையார் ஒழுங்கை, கல்வயல். (40774)

## சனி மாற்றம்

16 - 2 - 96 சனிமாற்றம் (இந்தியப் பஞ்சாங்கங்களின் படி கணிக்கப்பட்டது. 18 பக்கங்களுடையது) ரூபா 10/-. எங்கும் விற்பனையாகின்றது. எழுதியவர் சத்யா, ராகு, கேதுவுடன் சனி சேர்க்கை நாட்டிற்கு நன்மை அல்ல. [40763]

## தேவை

தரமான ஒலிபெருக்கி சாதனம் தேவை. தரம்-60w. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: போரூட், சுப்பர் மடம், பருத்தித்துறை. (40138)

டீஸல் மொறிஸ் ஒக்ஸ்போர்ட் பியரிங் செற் 10 உடன் தேவை. தி. பால சிங்கம், 10, கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி. (40657)

தட்டெழுத்தாளர் (தற்காலிகம்) தேவை. கல்வித் தகைமை, அனுபவம் மற்றும் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். வயது 21—35, வேதனம் நாள் ஒன்றிற்கு ரூபா 75/-. முடிவுத்திகதி 24-2-96, பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம், எருவன், பருத்தித்துறை வீதி, கொடிகாமம். [சி-4046]

## உறுப்புரிமைக் கட்டணம்

1995ஆம் வருட (NPTABF) வடமாகாண ஆசிரியர் சங்க சகாயநிதி உறுப்புரிமைக் கட்டணத்தை இதுவரை செலுத்தாதவர்கள் 29 - 2 - 96ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரியில் செலுத்தவும். நா. உலகநாதன்,செயலாளர், NPTBAF மே/பா. N. தியாகராஜா, ஆசிரியர், மீசாலை வடக்கு. (சி-4046)

## மணமகன் தேவை

நட்சத்திரம் அவிட்டம் உடைய, B.Sc. [Eng.] முடித்து தற்போது அமெரிக்காவில் M.Sc. படிக்கும், 33 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. C/o இல. 54, உதயன், சரசாலை தெற்கு. (40651)

## போத்தல்கள் தேவை

ஹொர்லிக்ஸ், விவா (பிளாஸ்ரிக் மூடியுடன்), பியர் அல்லது நெல்லிக்கிறஸ், ஜாம், கோடியல் போத்தல்களை சாவகச்சேரியில் உள்ள ராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், கிரியோன் கூல் பார், சிறி விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ் ஆகிய இடங்களில் ஒப்படைத்து அதற்குரிய பணத்தைப் பெற்றுக் கொள்ளவும். ரேஸ் லைன் இன்டஸ்றீஸ் (தனி) வரை. (சி-4001)

## இடமாற்றம்

கொக்குவிலில் இயங்கிவந்த சுகந்தன் மருந்தகம் தற்போது பெரிய அரசடி, சங்கத்தானை எனும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை அறியத் தருகின்றோம். (40747)

## A/L இரசாயனம்

முன்னாள் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியரும், கொழும்பு வளாகத்தில் கற்பித்தல் அனுபவமுள்ளவருமான B.Sc. [Cey] ஆசிரியரினால் முக்கியமான இப் பாடப்பிரிவு பிரத்தியேகமாக உங்கள் வீட்டில் கற்பிக்கப்படும் தொடர்பு: இல. 531, மே/பா உதயன். (40773)

## பயிலுநர் ஆசிரியர்
# போட்டிப் பரீட்சை

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள பயிலுநர் ஆசிரியர் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் பரீட்சை பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்.

காலம்: **18 — 02 — 96** மு. ப. 9. 00 மணி

ஆசிரியர்: திரு. T. லோகநாதன் (B. A)

முகவரி: ஞானோதய அக்கடமி
கண்டி வீதி, சாவகச்சேரி.

(40664)

★ உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்திடவும்.

★ புதிய, பழைய புரட்சிப் பாடல்களை COMBAC DISC மூலம் நேரடியாக பதிவு செய்யவும்.

★ T. V., டெக், ரேடியோ மற்றும் மின்சார உபகரணங்களை உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள.

அன்று
யாழ் நகரில் பிரசித்தி பெற்ற நிறுவனம்.
இன்று

# சுப்பஸோ வீடியோ

(ரவி ஒளிகானம்)

சிறி அமலா ஜுவல்லர்ஸ் அருகாமையில்
கண்டிவீதி, சாவகச்சேரி.

வன்னியில்:-

# சுப்பஸோ வீடியோ

407, சில்வா றோட், வட்டக்கச்சி.

(சி/4040)

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 18 — 04 — 1942



உதிர்வு: 14 — 02 — 1995

## அமரர் தியாகராசா அரசரத்தினம்

(முன்னாள் இ. போ. ச. சாரதி, காரைநகர்)

திதி: 17 - 02 - 1996

ஆண்டொன்று சென்றாலும் உங்கள் அன்பு முகம் என்றும் நீங்கவில்லை அழியாத நினைவலைகள் எம் மனதை விட்டு அகலவில்லை, அன்போடு எம்மை அரவணைத்த எம் பாசமிகு அப்பாவே என்றென்றும் உங்கள் அறிவுரைகள் எமக்கு வழிகாட்டும் ஓராண்டல்ல ஒரு யுகம் சென்றாலும் நித்தமும் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

முகவரி: தொல்புரம் மேற்கு, சுளிபுரம்.
தற்போதைய முகவரி: ...வில். (40786)

# பாடசாலை ஆரம்பமானதும் 1 ஆம் ஆண்டுக்கு அனுமதி

சாவகச்சேரி, பெப் 17

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மீள இயங்க ஆரம்பித்த பின்னர், முதலாம் ஆண்டுக்கு புதிய மாணவர்கள் பாடசாலைகளில் அனுமதிக்கப்படவிருப்பதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

முதலாம் ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிக்கும் பணிகள், பாடசாலைகள் இயங்காத காரணத்தால் மேற்கொள்ளப்படாமல் இருக்கின்றன.

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வகுப்பேற்றப்பரீட்சைகள் நடத்தப்பட்டு, ஐந்தாம் ஆண்டு மாணவர்களின் நிலைகுறித்து முடிவு எடுக்கப்பட்ட பின்னர் முதலாம் ஆண்டுக்கான அனுமதி வேலைகள் ஆரம்பிக்கும் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## நிதித்துறை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ கந்தசாமி வசந்தகுமார்—மே/பா க. சிவலிங்கம் இல 861, திருநகர், கிளிநொச்சி.

★ வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் — மே/பா N. மோகன், பனிக்கன்குளம், மாங்குளம்.

★ சுப்பிரமணியம் சுதர்சன் — 153 ம் கட்டை, முறிகண்டி, கிளிநொச்சி.

★ பூலோகசவுந்தரி தர்மராஜா— மே/பா சி. மயில்வாகனம் கற்சிலைமடு, ஒட்டிசுட்டான்.

★ மாணிக்கம் மகாதேவன் — மே/பா திருமதி K. கனகநாதன் 134, 1ம் குறுக்குத்தெரு, குமரபுரம், பரந்தன்.

★ வேலுப்பிள்ளை வடிவேலு—மே/பா நாகலட்சுமி 73 கொலி சென்ரர், ஆனந்தநகர், கனகபுரம், கிளிநொச்சி.

★ செல்லையா தங்கமுத்து அல்லது மகேஸ்வரி — மே/பா. ஐ. திருநாவுக்கரசு 203, கண்டி வீதி, கிளிநொச்சி.

# பெண்கள் கைக்கடிகாரம்

பெண்கள் அணியும் கைக்கடிகாரம் ஒன்று டச்சு வீதி, சாவகச்சேரியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள்

பொ. சிவஞானம்

இந்துக் கல்லூரி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

(40668)

# லலிதா மின்சார மருந்து

★ தலையிடி ★ தடிமன், நோவு
★ வாயுப்பிடிப்பு

முதலிய அனேக நோய்களுக்கு சிறந்த மருந்து

## லலிதா தொழிற்சாலை,

சுதுமலை.

உள்ளூர் உற்பத்தி

(40770) V. L.

# 31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி
## செல்லம்மா கனகரத்தினம்
(தங்கச்சியம்மா)

தோற்றம்: **12 — 8 — 1920** மறைவு: **18 — 1 — 1996**

பொன்மலர்க்கடம்புப் பொழில்
ஆத்தியொடு கொன்றை வேம்பு
வன்னி பூத்த கோண்டாவில் பதி போற்ற
செல்லம்மா பிறந்த நல்காலம்
உற்றார் சுற்றம் கூடி
தங்கச்சியம்மா என பேர்களோடேந்த
சின்னம்மா நீ சொந்த மண்ணில்
நீ இருக்க விரும்பினாய் அதோ!
உன் மண்ணில் உயிரினையே
இன்பமாய் சின்னம்மா நாம் அலற தாயே
எமை பேணிக்காத்து நிற்க நாம் சேயோமை
விட்டகன்று 31 நாள்கள் சென்றதன்றோ
கலங்குகின்றோம்
கந்தர்வளவு பிள்ளையாரே
கதியென அவனடி சேர்ந்தனையே
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இன்று நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

சகோதரர்கள், மைத்துனர்கள்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

முத்தட்டுமட ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(சி-2972) எழுதுமட்டுவாள் தெற்கு,
எழுதுமட்டுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தமிழரின் பாதுகாப்பு

மூதூர், கிளிவெட்டிப் பகுதியில் உள்ள குமரபுரம் தமிழ்க் கிராமத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் நடத்திய பயங்கரப் படுகொலைகள் குறித்து மேலும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

அந்தக் கிராமத்துத் தமிழ் மக்கள் அனைவரையும் பூண்டோடு அழித்துவிடவேண்டும் என்ற நோக்கத்துடன் நடத்தப்பட்ட அந்தத் தாக்குதலில், இரண்டு வெவ்வேறு இராணுவ முகாம்களைச் சேர்ந்த சிப்பாய்கள் கூட்டுச் சேர்ந்து, இணைந்து வெறியாட்டம் நடத்தியுள்ளார்கள்.

குமரபுரத்தைச் சேர்ந்த எவரும் தங்களது கொலைவாளில், துப்பாக்கியில் இருந்து தப்பிவிடக்கூடாது என்பதற்காக ஓர் அணி சுற்றி வளைத்து காவல் நிற்க, அடுத்த குழு தனது மிருகத்தனத்தை அரங்கேற்றி இருக்கிறது.

கிளிவெட்டியில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பதற்காக குமரபுரத்து மக்கள் அனைவரையும் வெட்டிச் சரித்து விடுவதென்று திட்டமிட்டு இந்த மனித வேட்டை நடத்தப்பட்டிருக்கின்றது.

அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவப் பாதகர்களால் இவ்வாறு காட்டுமிராண்டித் தனமாகக் கொலை செய்யப்பட்டது இது முதல் முறையல்ல. ஆயிரம் தடவைகளுக்கு மேல் இத்தகைய மிலேச்சத் தனமான, வெறித்தனமான பெருவாரிப் படுகொலைகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

ஆனால் இவற்றை நிறுத்தக் கூடிய சக்தி அரசாங்கங்களின் கையை மீறிப்போய்விட்டது. கொலை செய்பவர்களை பாதுகாத்து, அவர்களைத் தொடர்ந்து சேவையில் வைத்திருப்பதன் மூலம் சிங்கள அரசாங்கங்கள் தமிழர் படுகொலைகளுக்கு ஊக்கம் அளித்து வந்துள்ளன, சந்திரிகா அரசும் அதனையே செய்கிறது.

ஆகையால் இது போன்ற அரச பயங்கரவாதக் கொடுமைகள் குறித்து விசாரணை வைப்பதாகக் கூறுவது வெறும் கண்துடைப்பாகும். மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்துவதில் (ஒழிப்பதில் அல்ல) அரசு அக்கறை கொண்டுள்ளதாக வெளிநாடுகளுக்குக் காட்டி, கடன் வாங்குவதற்கே அன்றி, இராணுவத்தின் அரக்கத்தனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவல்ல. விசாரணைகள் எத்தன்மையினவாயினும் அவை பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் செவிலித்தாய் வம்புத்தனமே!

ஸ்ரீலங்கா இராணுவம் தமிழ் மண்ணில் இருந்து என்று விரட்டி அடிக்கப்படுகிறதோ, அன்று தான் தமிழர்களின் உயிர்ப் பாதுகாப்புக்கு உத்தரவாதமும், உறுதியும் உண்டாகும்.

தமிழர்களின் இந்த மூலாதாரப் பிரச்சினைக்கு முடிவு காண்பதற்கு கொண்டுவரப்படும் எந்த அரசியல் தீர்வும், தமிழ் மக்களின் பாதுகாப்பு, தமிழர் கைகளில் என்ற நிலைக்கு வகை செய்ய வேண்டும். தமிழ் மக்களின் பாதுகாப்புக்கென்று தமிழர் இராணுவத்தை உருவாக்கும் தீர்வே அவசியம்.

சிங்களத் தலைவர்களுக்கு அதற்கு மனமில்லையேல், ஸ்ரீலங்கா இராணுவத்தை தமிழ் மண்ணிலிருந்து விரட்டி அடிப்பதே பிரச்சினைக்குத் தீர்வைத் தரும். அதற்கான இன்றைய போராட்டத்தை முழு அளவில் முடுக்கி விடுவது தமிழர்களின் தவிர்க்க முடியாத பொறுப்பாகும்.

# அப்பாவித் தமிழரை கொல்லும் படையாக ஸ்ரீலங்கா இராணுவம்

### மனித உரிமை பாதுகாப்பு இயக்கப் பிரமுகர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 16

ஸ்ரீலங்கா இராணுவம் இன விரோதத்துடன் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களைக் கொல்லும் படையாகவே உருவெடுத்துள்ளது.

தமக்கு இழப்பு உண்டாகும் போது அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களை கொல்வது ஒரு விதியாகிவிட்டது.

இவ்வாறு தெரிவித்தார் மனித உரிமை பாதுகாப்பு இயக்கப் பிரமுகரான திரு. எஸ். மனோரஞ்சன்.

தமது படையினரின் பழி வாங்கும் குணாதிசயம தெரிந்திருந்தும் குமரபுரம் படுகொலைகளை இராணுவம் நடத்தவில்லை என்ற தோரணையில் அரசு முதலில் செய்தி வெளியிட்டது. ஆனால் பின்னர் அதனை மாற்றிக் கொண்டு இராணுவம் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்டிருக்கிறது.

பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக இராணுவம் போராடுவதாகக் கூறப்படுகிறது ஆனால் உயர்மட்டத்திலிருந்து எவ்வித பணிப்புரை வந்தாலும் சிப்பாய்கள் இனவாத உணர்வுடனேயே செயற்படுகிறார்கள்.

இத்தகைய இராணுவத்தினரின் நடத்தை குறித்து விசாரிக்க இராணுவ அதிகாரிகளை நியமிக்கக் கூடாது இராணுவ மல்லாத உயர் அதிகாரிகள் கொண்ட விசாரணைக்குழுவையே நியமிக்க வேண்டும் — என்று திரு. மனோரஞ்சன் சிங்கள பி.பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

(அ-6)

## 5 ஆம் கட்ட நிவாரணம் திங்கள் முதல்

சாவகச்சேரி, பெப். 17

இடம் பெயர்ந்தவர்களுக்கான 5 ஆம் கட்ட நிவாரணம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்படவிருக்கிறது.

இந்த நிவாரணம் வழங்குவதற்கான பொருள்கள் ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அரிசி, சீனி, மா, பருப்பு ஆகிய பொருள்களே வழங்கப்பட்டு வருகின்றன.

(இ-3-7)

# அரசின் கூற்றில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறதோ தெரியாது

### குமரபுரம் படுகொலைகள் குறித்து கூட்டணித் தலைவர்

லண்டன், பெப். 17

"குமரபுரம் படுகொலை தொடர்பாக இராணுவத்தினரை பாதுகாப்பில் வைத்துள்ளதாக அரசு கூறியுள்ளதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்பது எமக்குத் தெரியாது."

இப்படிக் கூறியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம்.

பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நீதிவான் ஒருவரின் தலைமையில் ஒரு கமிசன் அமைக்கப்படவேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறோம். அப்படி நியமித்தால் தான் இந்த விடயத்தை வடிவாக ஆராய முடியும். ஆனால் அரசு இராணுவ அதிகாரியை நியமித்தது ஓர் கண் துடைப்பாகத்தான் உள்ளது.

இது குறித்து தீர்வு ஒன்று இல்லாவிட்டால் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-3)

### மத்திய வங்கி குண்டுத் தாக்குதல்:

## பார்வை இழந்தோருக்கு சிகிச்சை அளிக்க டாக்டர்

### சென்னையிலிருந்து வந்துள்ளார்

கொழும்பு, பெப். 17

கொழும்பு மத்திய வங்கிக் குண்டு வெடிப்பில் கண் பார்வை இழந்தோர் மற்றும் கண்களில் பாதிப்பு ஏற்பட்டோருக்கு சிகிச்சை அளிப்பதற்காக சென்னையிலிருந்து கண் வைத்திய நிபுணர் ஒருவர் வந்துள்ளார்.

கொழும்பு சத்திய சாயி சமித்தியினரால் அமர் அகர்வால் என்ற டாக்டரே அழைக்கப் பட்டிருக்கின்றார்.

குண்டு வெடிப்பின் போது ஏற்பட்ட கண்ணாடிச் சிதறல்கள் காரணமாகவே பலர் பார்வை இழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## வன்னியிலிருந்து மூவர் மந்திகை ஆஸ்பத்திரிக்கு

மந்திகை, பெப். 17

விசர் நாயினால் கடியுண்ட மேலும் மூவர் கிளிநொச்சி, மல்லாவி ஆஸ்பத்திரிகளில் இருந்து, மந்திகை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மல்லாவியைச் சேர்ந்த குணசிங்கம் (வயது 34), குணராசா (வயது 34), கிளிநொச்சியைச் சேர்ந்த அனுரன் (வயது 18) ஆகியோரே இந்த மூவரும் ஆவர்.

இவர்களுடன் 11 பேர் வன்னிப் பகுதியில் விசர் நாய்க் கடிக்கிலக்காகி மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். (இ-15)

## செஞ்சிலுவைசங்கத்துக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

கிளிநொச்சி, பெப். 17

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஊடாக வடபகுதிக்கு வெளியில் இருந்து உறவினர், நண்பர்களால் அனுப்பப்பட்ட செய்திகள் தற்போது பருத்தித்துறை, கிளிநொச்சி செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுக் கிளைகளில் பெறப்பட்டுள்ளன.

பின்வருவோர் மேற்படி கிளைகளுக்குச் சென்று செய்திகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் —

செஞ்சிலுவைச் சங்க செய்திப்படிவம் ஒன்றினைப் பூர்த்தி செய்து பதிலை சமர்ப்பிக்க முடியும் என்றும் கிளிநொச்சி அரச அதிபருக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தகவல் அனுப்பி உள்ளது.

செய்திகள் கிடைக்கப் பெற்றுள்ளோர் விவரம் வருமாறு:-

க. மகேந்திரம்—வேலணை, அ. தர்மலிங்கம்—கோண்டாவில், தெ. மங்கையர்க்கரசி — கோண்டாவில், க. அருமைநாயகம்—மூளாய், ஜெ. சிறிரஞ்சன்—நந்தாவில், பத்மினிதேவராஜா — மானிப்பாய், ஜே. பொன்னுக்கோன் — கொழும்புத்துறை, க. பாலசுப்பிரமணியம்—நவக்கிரி, புஷ்பமலர் கணேஷ் — உடுவில், அ. ஹேமச்சந்திரன் உடுவில்.

சி. பாலகோஷலா—கொக்குவில் மேற்கு, நீ[illegible] முத்தையா— அரியாலை, து. பரமேஸ்வரி— உடுவில், ம. விக்னேஸ்வரி — இயற்றாலை, இ சரஸ்வதி—நுணாவில், த. சுரேஷ்குமார் — ஊரெழு மேற்கு, நா. தவராஜா—உரும்பிராய் வடக்கு, பொ நடராஜா இளவாலை, சி. சண்முகநாதன் செ. சிவசிதம்பரம் — உரும்பிராய்.

செள செல்வமலர்-ஊரெழு வடக்கு, வீ. வீரராகவன் — சாவகச்சேரி, க.பாலகிருஷ்ணன் — உரும்பிராய் வடக்கு, க. இராஜகுமாரி — கொக்குவில், பொ. சிவபாதசுந்தரம் — கந்தர்மடம், ச. அரியரட்ணம் — 531/2, கே. கே. எஸ். வீதி, மு. பத்மநாதன்—கோண்டாவில், மேற்கு, எ. றேமியூஸ் — சாவகச்சேரி, ம. இந்திரா — கிளிநொச்சி, வை. செல்வநாயகம் — மீசாலை வடக்கு.

ந. நேசக்கமலம் — உரும்பிராய் கிழக்கு, த. தியாகராஜா — தாளையடி, சிவகௌரி பாலசுப்பிரமணியம்—விநாயபும், அ. சிவஞானம் ஊரெழு கிழக்கு, க. கனகமணி — கோண்டாவில் வடக்கு, பா. சோதிநாதன்—உரும்பிராய் கிழக்கு, சி. சின்னம்மா — 25, பலாலி வீதி, கா. லோகேஸ்வரன் — மிருசுவில், நி. நிறோஜன், ச. சசிகுமார் — யாழ்ப்பாணம், ம. அன்னராணி — ஊரெழு மேற்கு, கு. சுப்பையா — ஏழாலை, யோ. பிரான்ஸிஸ் [illegible] (இ)

### வன்னிப் பிரதேசத்துக்கு

## இடம் பெயர்ந்த ஆசிரியர் கொடுப்பனவு இன்று முதல்

சாவகச்சேரி, பெப். 17

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து வன்னிக்கு இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கான 1996 ஜனவரி மாதம் சம்பளக் கொடுப்பனவுகள் இன்று முதல் வழங்கப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளைக் கோட்டங்களில் இணைக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி கல்வித் திணைக்களத்திலும் —

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப் பிரிவில் இணைக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு முல்லைத்தீவு கல்வித் திணைக்களத்திலும் —

பூநகரிக் கோட்டத்தில் இணைக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பூநகரி மத்திய மகாவித்தியாலயத்திலும் —

மாந்தை மேற்கு, துணுக்காய் கோட்டப் பிரிவில் இணைக்கப்பட்ட ஆசிரியர்களின் கொடுப்பனவு 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மல்லாவி மகாவித்தியாலயத்திலும் வழங்கப்படும்.

குறிப்பிடப்படும் நாள்களில் கொடுப்பனவை பெற முடியாத ஆசிரியர்கள் கிளிநொச்சி கல்வித் திணைக்கள கணக்காளரிடம் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

### புல்லுமலையில்

## கொல்லப்பட்ட படையினர் எண்ணிக்கை 6 ஆக உயர்வு

கொழும்பு, பெப். 17

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி மகா ஓயா வீதியில் உள்ள புல்லுமலையில் அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட அதிரடிப்படையினர் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது.

புல்லுமலை அதிரடிப்படை முகாமில் இருந்து தம்பட்டி சந்திக்கு ரோந்து சென்ற அதிரடிப் படையினர், முகாமில் இருந்து 700 மீற்றர் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டனர்.

மேற்படி தாக்குதலுக்கு உள்ளான படையினருக்கு உதவுவதற்காக அறந்தலாவ, புல்லுமலை முகாம்களில் இருந்து வந்த அதிரடிப்படையினர் மீதும் விடுதலைப் புலிகளின் மற்றொரு அணி தாக்குதல் நடத்தி அவர்களை விரட்டியடித்தது.

இந்த சம்பவத்தில் அதிரடிப் படையினரின் இரு சடலங்களையும், மற்றும் 3 ஹோல் கொமாண்டோக்கள், 40 மில்லி மீற்றர் பிஸ்டல் உட்பட பலஆயுததளபாடங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

படையினருக்கு உதவிக்கு வந்த மேலதிக படையினர் மீதான தாக்குதலின் போது கப்டன் சோதிகரன் அல்லது மகிந்தன் (கணபதிப்பிள்ளை மேகராசா), 2 ஆம் லெப்டினன்ட் தியாகநேசன் (கணபதிப்பிள்ளை பாக்கியராசா) ஆகிய போராளிகள் வீரமரணமடைந்தனர். (இ-3)

## மலாயன் ஓய்வூதியம்

ஜனவரி மாத மலாயன், சிங்கப்பூர் ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் அந்தந்த வங்கிகளுக்கு நேரடியாக யாழ். கச்சேரியினால் அனுப்பப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட மலாயன், சிங்கப்பூர் ஓய்வூதியர்கள் அந்தந்த வங்கிகளுடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

### பொன்னையா சிங்காரம் (பத்தர்)

(பெற்றொழிலாளர், முகாமையாளர்)

'சபர்மதி' புலோலி - கிழக்கு, விஸ்வகுல ஒழுங்கை, பருத்தித்துறை.

மண்ணுக்கொரு முத்தாக மலர்வு: **15 - 03 - 1923**
விண்ணுக்கொரு சொத்தாக உதிர்வு: **03 - 02 - 1996**

(நாளை ஞாயிற்றுக்கிழமை **18** பெப்ரவரி **1996**) (**16** ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவிலலும்)

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் திருவுருவாய் வாழ்ந்து எங்கள் அனைவருக்கும் வழிகாட்டிய தெய்வமே, உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

எனது தந்தையின் இறுதிக்கிரியையில் (**4-2-1996**) கலந்து கொண்டு ஒத்தாசை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் எல்லோரையும் நாளை (**18-02-1996**) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் வீட்டிலே நடைபெறும் அந்தியேட்டிக் கிரியை, வீட்டுக்கிருத்தியம். மதியபோசனம் ஆகியவற்றில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
அன்பு ஆசை மகன்
Dr. சிங்காரம் குகநாதன் (J. P.)
(பேராசிரியர், பரீட்சை ஆலோசகர் கல்விப்பிரிவு)

401, பேராதனை வீதி, கண்டி
அல்லது
31, மீரானியா வீதி, கொழும்பு - 12.
(40134)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா நல்லதம்பி

உரும்பிராய் கிழக்கு சுப்பையா நல்லதம்பி நேற்று (16- 2- 96) காலமானார்.

அன்னார் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், சற்குணநாதன் (கனடா), நற்குணநாதன் (கனடா), சுகிர்தா (கனடா), கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், தவமணி, கண்மணி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

**அன்னாரின்** இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 1 மணிக்கு புத்தூர் சந்தி தட்டாங்குளம் வீதியில் உள்ள செ. செல்வரட்டினம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று வேம்பிராய் இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
செ. செல்வரட்டினம்
(R.V.G கிளை உரிமையாளர்)

நகுலன் வீதி,
புத்தூர் சந்தி,
தட்டாங்குளம் றோட்,
காளி கோவிலடி,
மீசாலை வடக்கு.
(40671)

### பத்மநாதன் யோகேந்திரன் (பாலா)

(அனலைதீவு - கரம்பன்)

அனலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உடுவில் சிங்கம் ஒழுங்கையில் வசித்து வந்தவருமான பத்மநாதன் யோகேந்திரன் (பாலா) நேற்று மாலை 5-00 மணிக்கு மரணமானார். இவர் திரு பத்மநாதன் (ஓய்வுபெற்ற உடுவில் கிராமசபை பிரதமலிகிதர்), திருமதி சாந்தா ஆகியோரின் மூத்த புதல்வனும், ரவீந்திரன், ராஜேந்திரன், பாலேந்திரன், சுதா (கனடா), ஜெகதாம்பிகை (கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி, NCAT ஆங்கில முதலாம் ஆண்டு மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற உப தபாலதிபர் அனலைதீவு ஐ. நடராசாவின் அன்புப் பேரனும், திலகராசாவின் (கனடா) மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17-02-96) சனிக்கிழமை மாலை 3-00 மீசாலை வடக்கிலுள்ள S. வினாயகமூர்த்தி ஆசிரியரின் இல்லத்தில் நடைபெற்று, மீசாலை இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. பத்மநாதன் (தந்தை)

எஸ். வினாயகமூர்த்தி மாஸ்ரர்
வயல்கரை,
மீசாலை வடக்கு,
மீசாலை.
(40778)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 17-02-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கோஷ்டிச் சண்டையில் மீசாலையில் 9பேர் காயம்

சாவகச்சேரி, பெப் 17

மீசாலை தெற்கில் — பழைய ரயில் நிலையத்துக்குச் சமீபமாக — நேற்றுக் காலை ஏழு மணியளவில், இரு குடும்பங்களுக்கு இடையில் நடைபெற்ற சண்டையில் ஒன்பது பேர் படுகாயமடைந்தனர்.

இவர்களில் ஐவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து மீசாலையில் வசித்து வந்த குடும்பம் ஒன்றுக்கும், மீசாலையைச் சேர்ந்த ஒரு குடும்பத்துக்கும் இடையில் மூண்ட காணித் தகராறே கோடரி, கத்திகள், கம்புகள் கொண்டு நடத்தப்பட்ட கடும் சண்டையாக மாறியதாகச் சொல்லப்படுகிறது.

ஒரு வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரும் இந்தச் சண்டையின்போது சேதமாக்கப்பட்டது.

ஒரு வீட்டைச் சேர்ந்தவர்கள் காலைக் கடன் கழிக்கச் சென்றபோதே சண்டை மூண்டதாகவும்—

அதனைத் தொடர்ந்து ஒரு தரப்பார் அடுத்த சாராரின் வீட்டுக்குச் சென்று அங்கிருந்த குடும்ப அங்கத்தவர்களை தேடித் தேடித் தாக்கியதாகவும்— கூறப்படுகிறது.

காயமடைந்தோரில் ஐவர் ஆபத்தான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

சின்னத்தம்பி கார்த்திகேசன் (வயது 52), கார்த்திகேசன் ஜீவவினோதன் (வயது 26), கார்த்திகேசன் சிவகாந்தன் (வயது 22), கந்தப்பிள்ளை தர்மகுலசிங்கம் (வயது 48), வேலுப்பிள்ளை தங்கராசா (வயது 42).

கார்த்திகேசன் இரத்தினேஸ்வரி (வயது 47), கா. பிரபு (வயது 13), எஸ். சோதிலிங்கம் (வயது 48), கே. பாலேந்திரன் (வயது 19) ஆகியோர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

தகவல் கிடைத்து சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்த சாவகச்சேரி தமிழீழ காவல் துறையினர் சந்தேக நபர்களில் சிலரைக் கைது செய்தனர்.

(அ-31-13-15-173)

### ரோந்து

மட்டக்களப்பு நகரப் பகுதியில் ரஷ்ய தயாரிப்பு எம். ஐ. 17 ரகக் ஹெலிக்கொப்டர்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

### புலிகளின் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ழைப்பு இருக்கவேண்டியது அவசியம்.

சட்டவிரோதமான ஆயுதக் கப்பல் ஒன்றின் நகர்வு குறித்து — எந்த ஒரு நாடும் — அது இந்தியாவானாலும் அமெரிக்காவானாலும் ஜப்பானானாலும்— அந்தக் கப்பல் செல்லும் நாட்டுக்கு தகவல் தரவேண்டியது கடமையாகும்.''— என்றார்.

(உ-3-6-7)

### துண்டிக்கப்பட்ட.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரிசோதனைக்காகவும், அடையாளம் காணப்படுவதற்காகவும் மீண்டும் இந்தத் தலை பிரிட்டிஷ் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட இருப்பதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம், மேலதிக நீதிபதி பத்மினி ரணவன்சவுக்கு நேற்று அறிவித்தது.

புலனாய்வுத் திணைக்கள பொலீஸ் இன்ஸ்பெக்டர் நெல்சன் ரட்நாயக்கா நீதிமன்றத்தில் தெரிவிக்கையில், துண்டிக்கப்பட்ட தலை பற்றிய இரசாயனப் பரிசோதனையை நடத்துமாறு கிளாஸ்கோ பல்கலைக் கழகப் பேராசிரியர் பீற்றர் பேனான்ஸை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் [illegible] வித்தார். (இ-7)

## ஆயுள்வேத மருத்துவ நேர்முக பரீட்சை

ஆயுள்வேத மருத்துவ உத்தியோகஸ்த்தர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பில் சுதேச மருத்துவ அமைச்சின் காரியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. (இ)

அ. சோமசுந்தரம்பிள்ளை B. A., F. C. A.,
பட்டயக் கணக்காளர்

பழைய விலாசம்:
91 1/4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

புதிய விலாசம்:
மே/பா, மேர்ச்சன்ற் பினான்ஸ் லிமிற்,
சாரையடி, பருத்தித்துறை.
(சி-4043)

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா தில்லையம்பலம்

மானிப்பாயைச் சேர்ந்த சின்னையா தில்லையம்பலம் நேற்றிரவு காலமாகிவிட்டார்.

இவர் தங்கமுத்துவின் அன்புக் கணவரும், இராமேஸ்வரம் (இ. போ. ச. சாரதி), சோமசுந்தரம், நன்னித்தம்பி (யா. மா. கூ. சபை அச்சகம்), இராசலிங்கம் (சுவிஸ்), சூரியகலா (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், இரத்தினம்மா, பாக்கியம், ரூபவதி, பிறேமராணி [சுவிஸ்], கணேஸ் [சுவிஸ்] ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17-02-96) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
தி. இராமேஸ்வரம்
(மகன்)

நிரந்தர முகவரி:
மெமோறியல் லேன்,
மானிப்பாய்.

தற்போதைய முகவரி:
மீசாலை தெற்கு,
அல்லாரை.
(40780)

### சண்முகநாதன் சோதிநாதன்

நாயன்மார்கட்டு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகநாதன் சோதிநாதன் (வெய்யிலுகந்தவிநாயகர் ஆலய பரிபாலகரும் வேளாதோப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அர்ச்சகரும்) 16-02-96 இல் சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் கெங்காதேவியின் அன்புக்கணவரும் கணேஷநாதன் (யாழ். மாநகர சபை), காந்திமதி, பிரதீபன், ஜெனனி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கேணியடி வீதி, மீசாலையில் இன்று [17- 02- 96] பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சோ. கணேஷநாதன் (கணேஷ்)
(மகன்)

விக்கினேஸ்வரா பாடசாலை அருகாமை,
கேணியடி லேன்,
மீசாலை மேற்கு.
[40779]

### சரவணமுத்து கதிரவேலு

(பிரபல ஒப்பந்தகாரர்)

வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவிலடியில் நீண்ட காலம் வசித்து பின்னர் கொக்குவில் பிரம்படியில் வசித்து தற்போது தச்சந்தோப்பில் வசித்தவருமான சரவணமுத்து கதிரவேலு நேற்றுச் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்ற சரவணமுத்து ஆச்சிமுத்து தம்பதிகளின் புதல்வனும், பராசக்தி (துரையம்மா) வின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முத்தையா - இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரன் (யாழ். மாநகரசபை), இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, பத்மாவதி, பிரபாகரன் (கனடா), இராஜமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரசாமி, இராஜேந்திரம், தில்லைநாதன் (U. K) நேசகுமார், இராஜேஸ்வரி, நிர்மலா(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கனகரத்தினம், துரைராஜா, கமலம், துரைமணி, சிறீதேவி, காலஞ்சென்றவர்களான கருணைநாயகி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-02-96) தற்போதைய வதிவிடமான தச்சன் தோப்பில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு தகனக் கிரியைக்காக வேம்பிராய் பிணமுருங்கை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
K. பரமேஸ்வரன் (மகன்)
S. குமாரசாமி (மருமகன்)
(40772)

தச்சன்தோப்பு.

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org